ஊடக அறிக்கை
தொடர்பூட்டல் திணைக்களம், இல.30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை
+94 11 2477424 / +94 11 2477669 +94 11 2346304
communications@cbsl.lk / dcommunications@cbsl.lk www.cbsl.gov.lk

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

வெளியிடுபவர் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம்
திகதி 2024 ஒகத்து 15

# இலங்கை மத்திய வங்கி நாணயக் கொள்கை அறிக்கை ஒகத்து 2024இனை வெளியிடுகின்றது

மத்திய வங்கி 2023ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க இலங்கை மத்திய வங்கிச் சட்டத்தின் தேவைப்பாடுகளுடன் இசைந்து செல்லும் விதத்தில் 2024இற்கான அதன் இரண்டாவது நாணயக் கொள்கை அறிக்கையினை வெளியிட்டது. இவ்வறிக்கையின் உள்ளடக்கமானது 2024 யூலை மீளாய்வின் போது நாணயக் கொள்கைத் தீர்மானத்தினை உருவாக்குவதில் மத்திய வங்கியின் நாணயக் கொள்கைச் சபையினால் பரிசீலனையிற்கொள்ளப்பட்ட தகவல்களை அடிப்படையாகக் கொண்டுள்ளது.

பொருளாதாரம் தொடர்பாக குறிப்பாக, பணவீக்கம் மற்றும் பொருளாதார வளர்ச்சி என்பன தொடர்பில் முன்னோக்கிய பார்வையிலமைந்த நோக்குகளை நாணயக் கொள்கை அறிக்கை வழங்குகின்றது. உள்நாட்டு மற்றும் உலகளாவிய துறைகளின் தற்போதைய மற்றும் எதிர்பார்க்கப்படும் அபிவிருத்திகளைக் கருத்திற்கொண்டு, பணவீக்கம் மற்றும் பொருளாதார வளர்ச்சி என்பன மீதான எறிவுகளிற்கான இடர்நேர்வுகளின் மதிப்பீடொன்றினை வழங்குவதனையும் அறிக்கை நோக்காகக் கொண்டுள்ளது. இவ்வறிக்கையினூடாக, மத்திய வங்கி அதன் அண்மைய நாணயக் கொள்கைத் தீர்மானங்களின் பின்னணியிலுள்ள நியாயபூர்வதன்மையினைத் தொடர்பூட்டுவதனூடாக வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறும்தன்மை என்பவற்றை மேம்படுத்துவதற்கு முயற்சிக்கின்றது.

## முக்கிய பண்புகள்

- தளர்வடைகின்ற பணவீக்க அழுத்தங்களுடன் இசைந்து செல்லும் விதத்தில் தளர்த்தப்பட்ட நாணயக் கொள்கை நிலைப்பாடானது 2024இன் இதுவரையான காலப்பகுதியில் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டது.
- 2024இன் முற்பகுதியில் ஏற்பட்ட தற்காலிகமான உயர்வொன்றினைத் தொடர்ந்து, வலு விலைகளில் ஏற்பட்ட குறைப்பு, உணவுப் பணவீக்கத்தின் மெதுவடைதல் மற்றும் குறைவடைந்த கேள்வி நிலைமைகள் என்பன காரணமாக முதன்மைப் பணவீக்கமானது அதன்பின்னர் குறிப்பிடத்தக்களவு வீழ்ச்சியடைந்தது.
- முதன்மைப் பணவீக்கமானது அண்மைய காலத்தில் இலக்கிடப்பட்ட 5 சதவீத மட்டத்திற்கு (ஆண்டிற்கு ஆண்டு) மிகவும் கீழாகத் தொடர்ந்தும் காணப்பட்டு, நடுத்தர காலத்தில் இலக்கிடப்பட்ட மட்டத்தினை அண்மித்து படிப்படியாக நிலைபெறுமென எதிர்பார்க்கப்படுகின்றது.
- பேரண்டப்பொருளாதார உறுதிப்பாட்டின் படிப்படியான மீட்டெடுப்பு, தாழ்ந்தளவிலான வட்டி வீதங்கள் மற்றும் மேம்படுகின்ற முதலீட்டாளர் நம்பிக்கை என்பவற்றினால் ஆதரவளிக்கப்பட்டு, பொருளாதார நடவடிக்கையானது 2024இல் தொடர்ந்தும் மீளெழுச்சியடைந்தது.
- இலங்கைப் பொருளாதாரமானது 2024இல் அதன் வளர்ச்சி உத்வேகத்தினைத் தொடர்ந்து, நடுத்தர காலத்தில் அதன் உள்ளார்ந்த ஆற்றல் மட்டத்தினை நோக்கிப் படிப்படியாக நகருமென எதிர்பார்க்கப்படுகின்றது.

*இணையவழி வெளியீடொன்றாகக் காணப்படுகின்ற நாணயக் கொள்கை அறிக்கையினை [நாணயக் கொள்கை அறிக்கை · Central Bank of Sri Lanka (cbsl.gov.lk)] எனும் மத்திய வங்கியின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் பெற்றுக்கொள்ளலாம்.*

# நாணயக் கொள்கை அறிக்கை நிழற்படம்

2024 ஓகத்து

## நாணயக் கொள்கைக் கட்டமைப்பு


**5%**

இலங்கை மத்திய வங்கி **பணவீக்கத்தினை** இலக்கு வீதத்தில் பேணுகின்ற வேளையில் பொருளாதார வளர்ச்சி அதன் உள்ளார்ந்த ஆற்றலினை அடைவதற்கு ஆதரவளிப்பதனை நோக்காகக் கொண்டு



நெகிழ்ச்சித்தன்மைவாய்ந்த பணவீக்க இலக்கிடல் கட்டமைப்பொன்றின் கீழ் நாணயக் கொள்கையினை மேற்கொள்கின்றது.

## அண்மைய நாணயக் கொள்கைத் தீர்மானங்கள்






இலங்கை மத்திய வங்கி 2023 நடுப்பகுதியில் ஆரம்பிக்கப்பட்ட தளர்த்தப்பட்ட நாணயக் கொள்கை நிலைப்பாட்டினைத் தொடர்கின்றது.

## தோற்றப்பாடு

**முதன்மைப் பணவீக்கமானது**

எதிர்வருகின்ற மாதங்களில் இலக்கிற்குக் கீழாகக் காணப்படுமெனவும்

நடுத்தர காலத்திலான பொருத்தமான கொள்கைகளுடன் 5 சதவீத இலக்கினை அண்மிக்குமெனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.



உள்ளார்ந்த ஆற்றல் மட்டத்தினை நோக்கிய **பொருளாதார வளர்ச்சி** மீட்சியானது பொருத்தமான கொள்கைகளுடன் நடுத்தர காலத்தில் தொடருமென எதிர்பார்க்கப்படுகின்றது.